MAY 2024 **P/ID 35321/PTL3L**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. கைக்கிளைக்குக் கருப்பொருள் உண்டா?

2. 'தமிழ்க் காதல்' என்னும் நூலைப் பற்றி நீர் அறிவன யாவை?

3. பூவின் பெயரால் புறத்திணை எது?

4. செலவு ஒழிதல் என்றால் என்ன?

5. அகநானூற்றின் முப்பிரிவுகள் யாவை?

6. குறுந்தொகை – சொற்பொருள் கூறுக.

7. சென்னி என்போர் எந்த அரச மரபினர்?

8. செவியறிவுறூஉ – பொருள் சுட்டுக.

9. நற்றிணை – பிரித்தெழுதுக.

10. உமணரின் தொழில் யாது?

11. ஆற்றுதல் என்றால் என்ன?

12. யாப்பால் பெயர் பெற்ற தொகை நூல்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. அகத்திணைகளுக்கு உரிப்பொருள் சுட்டுக.

14. குடவோலை முறையை விளக்குக.

15. அகப்பாக்களால் அறியலாகும் இளையோர் உளவியலை விளக்குக.

16. அகநானூற்றுச் செவிலி நவ்விப் பிணாக் கண்டு சொல்லியது யாது?

17. இரும்பொறைக்கு நரிவெரூத்தலையார் கூறிய அறவுரை யாது?

18. தலைவன் சிறுமை செய்யார் என்று நற்றிணைத் தலைவி கூறுவதை எழுதுக.

19. கலித்தொகைப் பாக்கள் ஓரங்க நாடகமாக அமைவதை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. அகநானூற்றின் பாலைத் திணைப் பாடல்களைத் தொகுத்தெழுதுக.

21. பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியின் சிறப்புகளாகக் காரிகிழார் கூறுவனவற்றை விளக்குக.

22. நற்றிணையில் குறிஞ்சி மற்றும் நெய்தல் திணைப் பாடற்கருத்துகளை விவரி.

23. குறுந்தொகையின் குறிஞ்சி, நெய்தல் திணைப் பாடல் செய்திகளை எழுதுக.

24. தலைவி மற்றும் செவிலியின் கூற்றுகளாகக் கலித்தொகை மொழிவனவற்றை எடுத்துரைக்க.

———————